டிரஸ்ட் ஆரம்பித்திட...
புதிதாக டிரஸ்ட், பவுண்டேஷன், கட்சி, ஆசிரமம், சங்கம், மன்றம், கழகம் பதிவு செய்திட தொடர்பு கொள்ளவும்.
பகவான் பவுண்டேஷன்
96004 02096

நல்லவே எண்ணல் வேண்டும்...,
எண்ணிய முடிதல் வேண்டும்...,

# சக்கர வியூகம்

தினசரி நாளிதழ் "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" DAILY NEWS PAPER
★SAKKRA VIYUGAM★

இணையத்தில் வாசிக்க..,

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 133 07.11.2025 FRIDAY IPPASI : 21 PRICE : RS.5/-
மலர் : 01 இதழ் : 133 07.11.2025 வெள்ளிக்கிழமை ஐப்பசி : 21 விலை : ரூ.5/-

3 பதிவுத்துறை உதவி தலைவர், மாவட்ட பதிவாளர் பணிகளுக்கு பதவி உயர்வு வழங்க வேண்டும் : அன்புமணி

4 தேர்தல் கூட்டணியை நான் பார்த்துக் கொள்கிறேன்: அதிமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் பழனிசாமி உறுதி

2 2026க்கான டிஎன்பிஎஸ்சி தேர்வு அட்டவணை விரைவில் வெளியாகும் என தேர்வாணைய தலைவர் தகவல்

# ஊடுருவல்காரர்களை ஆதரிக்கும் ஆர்ஜேடி, காங்கிரஸ்: பிரதமர் மோடி தாக்கு

பாட்னா: நவ.7-

''ஊடுருவல்காரர்களைக் கண்டுபிடித்து, அவர்கள் எங்கிருந்து வந்தார்களோ அங்கேயே திருப்பி அனுப்புவோம்; ஆர்ஜேடி காங்கிரஸ் அவர்களை பின்வாசல் வழியாக இந்திய குடிமக்களாக மாற்ற முயற்சி செய்கின்றனர்,'' என பிரதமர் மோடி கடுமையாக சாடியுள்ளார்.

பீஹார் மாநிலத்தில் 121 சட்டசபை தொகுதிகளில் நேற்று (நவ., 06) முதல் கட்ட தேர்தல் ஓட்டுப்பதிவு துவங்கி விறுவிறுப்பாக நடந்து வருகிறது. இந்த சூழலில் இரண்டாம் கட்ட தேர்தல் ஓட்டுப்பதிவுக்காக, ஹராரியாவில், தேர்தல் பிரசாரத்தில் பிரதமர் மோடி பேசியதாவது: பீஹார் முதல்வராக நிதிஷ் குமார் பதவியேற்ற பிறகு மாநிலம் வளர்ச்சியை நோக்கி சென்றது.

பாஜ தலைமையிலான மத்திய அரசு பீஹார் மாநில விவசாயிகளுக்கு அதிக நிதி வழங்கி உள்ளது. ஆர்ஜேடி ஆட்சியில் வளர்ச்சி பணிகள் நடக்கவில்லை. நிதிஷ் குமார்



ஆட்சி காலத்தில் தான் வளர்ச்சிப் பணிகள் வேகம் எடுத்தன.

19902005ம் ஆண்டு வரை ரவுடிகள் ராஜ்ஜியம், பழி தீர்த்தல், ஊழல் என பீஹாரில் இருந்ததை ஒழித்துள்ளோம். 15 ஆண்டுகளாக இந்த காட்டாட்சி ராஜ்ஜியம் பீஹாரை பேரழிவுக்கு உட்படுத்தியது. உங்கள் தாத்தா, பாட்டியின் ஒரு ஓட்டு பீஹாரை சமூக நீதியின் பூமியாக மாற்றியது. ஆர்ஜேடி மற்றும் காங்கிரஸ் இடையேயான மோதல் தற்போது பீஹாரில் உள்ள துணை முதல்வர் வேட்பாளர் 'காட்டாட்சி ராஜ்ஜியத்திற்கு' எதிராகப் பேசும் அளவுக்கு உயர்ந்துள்ளது. ஊடுருவல்காரர்களைக் கண்டுபிடித்து, அவர்கள் எங்கிருந்து வந்தார்களோ அங்கேயே திருப்பி அனுப்புவோம்;

ஆர்ஜேடி காங்கிரஸ் அவர்களை பின்வாசல் வழியாக இந்திய குடிமக்களாக மாற்ற முயற்சி செய்கிறது. இன்று முதல் கட்ட தேர்தல் ஓட்டுப்பதிவில், பீஹார் வளர்ச்சிக்கு மக்கள் ஓட்டளிக்கின்றனர். மாநிலத்தில் ஊடுருவல்கள் பெரிய சவாலாகவே உள்ளன. ஊடுருவல்காரர்களை ஆர்ஜேடிகாங்கிரஸ் கூட்டணி ஆதரிக்கிறது. தேசிய ஜனநாயக கூட்டணிக்கு அதிகமாக ஓட்டளிக்க வேண்டும்.

பீஹார் மக்கள் காலையிலிருந்தே ஓட்டுச்சாவடிகளில் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கின்றனர். பீஹார் இளைஞர்களிடையே முன்னெப்போதும் இல்லாத உற்சாகம் நிலவுகிறது. அனைத்து வாக்காளர்களையும் நான் வாழ்த்துகிறேன். இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.



■ தேனி மாவட்டம், சின்னமனூர் நகராட்சி பொன்நகர் நகராட்சி தொடக்கப்பள்ளியில், பள்ளி மேம்பாட்டு மூலதன மானிய திட்டத்தின் கீழ் ரூ.74 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறை கட்டடம் கட்டுமான பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



■ தேனி மாவட்டம், உத்தமபாளையம் பேரூராட்சியில் மூலதன மானிய நிதியின் கீழ் ரூ. 1.37 கோடி மதிப்பீட்டில் புதிய பேரூராட்சி அலுவலக கட்டடம் கட்டுமான பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000




# ஒட்டன்சத்திரத்தில் உங்களுடன் ஸ்டாலின் முகாமில் குருவி கூட தனக்கு சொந்த வீடு கட்ட ஆசைப்படும் அதுபோல்தான் தமிழ்நாடு முதலமைச்சர் உணவுத்துறை அமைச்சர் பெருமிதப் பேச்சு

திண்டுக்கல், நவ.7-

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், தங்கச்சியம்மா பட்டி,காப்பிளியபட்டிஊராட்சிகளில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமில் கலந்து கொண்டு, பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.இம்முகாமில் வட்டார வளர்ச்சி அலுவலர் பிரபு பாண்டியன் வரவேற்றார். உதவித்திட்ட அலுவலர் பிரபாகரன் பழனி கோட்டாட்சியர் கண்ணன் முன்னிலை வகித்தனர்

இம்முகாமில் சிறப்பு விருந்தினராக உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி கலந்து கொண்டு கூறியதாவது

தமிழ்நாடு முதலமைச்சர் பொறுப்பேற்ற பின்னர், கடந்த 4 ஆண்டுகளில் தமிழ்நாட்டு மக்களுக்காக எண்ணற்ற திட்டங்களை அறிவித்து, செயல்படுத்தி வருகிறார்கள். அரசின் திட்டங்கள் அனைத்தும் அனைவருக்கும், கட்சி, இனம், மதம் பாகுபாடு இன்றி எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது

அனைத்து அரசு அலுவலர்களும் உங்கள் வீட்டை தேடி, உங்கள் ஊரை தேடி வருகின்ற திட்டமாகும் உங்களுடன் ஸ்டாலின்

இந்த முகாமில் வருவாய்துறை, ஊரக வளர்ச்சித்துறை, மின்சாரத்துறை, வேளாண்மைத்துறை, கூட்டுறவுத்துறை ஆகிய 15 துறைகளை சேர்ந்த அலுவலர்கள் வந்துள்ளார்கள். சுமார் 46 சேவைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. நீங்கள் மனுக்கள் கொடுத்தால் மனுக்கள் மீது 45 நாட்களில் தீர்வு காண



வேண்டுமென்று முதலமைச்சர் உத்தரவு அளித்துள்ளர் மேலும் குருவி கூட தனக்கு சொந்த வீடு கட்ட வேண்டும் என்று ஆசைப்படும் அதுபோலத்தான் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வீடு இல்லாத அனைத்து ஏழை மக்களுக்கும் வீடு கட்டித் தருவதே எண்ணமாக கொண்டு செயல்பட்டு வருகிறார் என்றும் பெருமிதத்துடன் பேசினார்

இப்பகுதி மக்களுக்கு குடிநீர் பிரச்சனையை தீர்பதற்காக காவிரி கூட்டுக்குடிநீர் திட்டப் பணிகள் ரூ.1,000 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தப்பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்கப்படும். பெண்களின் நலனுக்காக நகரப் பேருந்துகளில் கட்டணமில்லா பயணம் மேற்கொள்ளும் விடியல் பயணத் திட்டம் செயல்படுத்தப் படுகிறது.

6முதல் 12ஆம் வகுப்பு வரை அரசு பள்ளிகள் மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில்(தமிழ் வழிக்கல்வி) படித்து உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் 'புதுமைப்பெண்' திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன்மூலம் தமிழ்நாட்டில் பெண்கள் உயர்கல்வி படிப்பது உயர்ந்துள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழ்நாட்டிலுள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்கே சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேசன் பொருட்களை விநியோகம் செய்யும் "முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை" பயனாளிகளுக்கு குடிமைப் பொருட்களை வழங்கி தொடங்கி வைத்து, தாயுமானவர் திட்ட வாகனங்களின் சேவைகளை தொடங்கி வைத்துள்ளார்கள் மாதத்தின் இரண்டாவது சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் வீட்டிற்கே பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் சுமார் 20 இலட்சம் பயனாளிகள் பயன்பெற்று வருகின்றனர்.

மேலும், பெற்றோரை இழந்த குழந்தைகள் 18 வயது வரையிலான பள்ளிப் படிப்பு முடியும் வரை இடைநிற்றல் இன்றி கல்வியை தொடர மாதம் ரூ.2,000 உதவித்தொகை வழங்கிடும் "அன்புக்கரங்கள்" திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார்கள்.

பொதுமக்கள், விவசாயிகள், மாணவ, மாணவிகள் என அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் எண்ணங்கள், எதிர்பார்ப்பு மற்றும் நம்பிக்கையை பூர்த்தி செய்யும் விதமாக எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி பொற்கால ஆட்சி நடத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் கரங்களை வலுப்படுத்தும் விதமாக என்றென்றும்

உறுதுணையுடன் இருக்க வேண்டும், என உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் பேசினார். ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியம் தங்கச்சியம்மாபட்டி ஊராட்சி பட்ஸ் மெட்ரிக் நிலைப்பள்ளியில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமில் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் 19 மகளீர் சுய உதவி குழுக்களுக்கு2கோடியே45 லட்சம் ரூபாய் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் வட்டாட்சியர் சஞ்சய் காந்தி,வட்டார வளர்ச்சி அலுவலர் காமராஜ்,திமுக ஒன்றிய செயலாளர்கள் இரா.ஜோதீஸ்வரன்,க.தர்மராஜ், எஸ்.ஆர்.கே.பாலு, ஒன்றிய துணை செயலாளர்கள் ,கே.வி. முருகானந்தம், சிவக்குமார், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் தனலட்சுமி,சிவவாக்கியம் ராமசாமி, ஒட்டன்சத்திரம் ஒன்றிய பொறியாளர் முத்துக்கிருஷ்ணன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஈஸ்வரி,கிராம நிர்வாக அலுவலர் கோவிந்தராஜ் ஊராட்சி செயலர் கண்ணாயிரம் மற்றும் ஊர் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



■ தேனி மாவட்டம், 201.கம்பம் சட்டமன்ற தொகுதிகுட்பட்ட உத்தமபாளையம் பேரூராட்சி பகுதியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் (Special Intensive Revision) மேற்கொள்வது தொடர்பாக வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் வாக்காளர் கணக்கீட்டு படிவம் வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டு வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ்ஜீத் சிங் நேரில் பார்வையிட்டார்

# தவெக தலைமையில்தான் கூட்டணி: முதல்வர் வேட்பாளராக விஜய் அறிவிப்பு சிறப்பு பொதுக்குழுக் கூட்டத்தில் தீர்மானம்



சென்னை, நவ.07-

தமிழகத்தில் தவெக தலைமையில்தான் கூட்டணி அமைக்கப்படும். விஜய்தான் முதல்வர் வேட்பாளர் என்று கட்சியின் சிறப்பு பொதுக்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரத்தில் நேற்று நடைபெற்ற தவெக சிறப்பு பொதுக்குழுக் கூட்டத்தில் கட்சித் தலைவர் விஜய் பேசியதாவது: சொல்ல முடியாத வேதனையிலும், வலியிலும் இத்தனை நாட்கள் இருந்தோம். நம் சொந்தங்களின் நலன் கருதி மவுனம் காத்தோம். அமைதியாக இருந்த நேரத்தில் நம்மைப் பற்றி வன்ம அரசியல் வலை பின்னப்பட்டு, அர்த்தமற்ற அவதூறுகள் பரப்பப்பட்டன. இவற்றை சட்டம், சத்தியத்தின் துணையுடன் துடைத்தெறியப் போகிறோம்.

அரசியல் செய்ய விருப்பம் இல்லை என்று அடிக்கடி சொல்லும் முதல்வர் ஸ்டாலின், நம்மைக் குறிப்பிட்டு பல்வேறு அவதூறுகளை பதிவு செய்துள்ளார். சட்டப்பேரவையில் எவ்வளவு வன்மத்தை கக்கியுள்ளார்.

இந்தியாவிலேயே எந்த அரசியல் கட்சித் தலைவருக்கும் இல்லாத அதிக கட்டுப்பாடுகள் நமக்கு கொடுக்கப்பட்டிருந்தன. அரசியல் காழ்ப்புணர்ச்சியுடன், நேர்மையற்று, நம்மைப் பற்றி குற்றம் சாட்டியுள்ள குறுகிய மனம் கொண்ட முதல்வரிடம் சில கேள்விகளை முன்வைக்கிறேன்.

பொய்களையும், அவதூறுகளையும் அவிழ்த்துவிட்டு, கோடிகளைக் கொட்டி அமர்த்தப்பட்ட வழக்கறிஞர்கள், திமுக அரசின் தில்லுமுல்லுகளால் உச்ச நீதிமன்றத்தில் திணறியதை முதல்வர் மறந்துவிட்டாரா? கரூர் சம்பவத்துக்குப் பிறகு அவசரமாக தனிநபர் ஆணையம் அமைக்கப்பட்டது. அந்த ஆணையத்தையே அவமதிப்பது போல, அரசு உயரதிகாரிகள், காவல் துறை அதிகாரிகள் செய்தியாளர்களை சந்தித்தது ஏன்? இதையெல்லாம் மறந்து, சாமர்த்தியமாக பேசியிருக்கிறார் முதல்வர். 50 ஆண்டுகளாக பொதுவாழ்வில் இருப்பவர் இப்படி பொய் பேசலாமா? உச்ச நீதிமன்றம் தமிழக அரசின் தலையில் குட்டியதை முதல்வர் மறந்துவிட்டாரா?

மனிதாபிமானம், அரசியல், அறம், மாண்பு எதுவுமே இல்லாமல், வெறும் பேச்சால் அரசியல் ஆட்டத்தை ஆடத் தொடங்கிவிட்டார் முதல்வர். நான் கேட்ட கேள்விகளை, உச்ச நீதிமன்றம் கேட்டுள்ளது. நீதிமன்றத்துக்கு மட்டுமல்ல, மக்களுக்கும் தமிழக அரசின் மீது நம்பிக்கை இல்லாமல் போய்விட்டது. 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் மக்கள் இதைப்புரிய வைப்பார்கள்.

நமக்கு வந்த இடையூறுகள் தற்காலிகமானவைதான். அனைத்தையும் தகர்த்தெறிவோம். மக்களுடன் களத்தில் நிற்போம். 2026ல் இரண்டு பேருக்குத்தான் போட்டி. ஒன்று தவெக. இன்னொன்று திமுக. இந்தப் போட்டி இன்னும் பலமாக மாறப் போகிறது. நூறு சதவீதம் வெற்றி வாகை சூடுவோம். புதிய வரலாறு படைப்போம். இவ்வாறு அவர் கூறினார்.

12 தீர்மானங்கள்....


தவெக சிறப்பு பொதுக்குழுக் கூட்டத்தில் பொதுச் செயலாளர் ஆனந்த், இணைப் பொதுச் செயலாளர் சிடிஆர்.நிர்மல் குமார், தேர்தல் பிரச்சார மேலாண்மைப் பிரிவு பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா, கொள்கைப் பரப்பு பொதுச் செயலாளர் கே.ஜி.அருண்ராஜ் மற்றும் மாவட்டச் செயலாளர்கள், பொதுக் குழு உறுப்பினர்கள் என 1,000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

கரூரில் நடந்த கூட்டத்தில் பாதுகாப்புக் குறைபாடு உள்ளிட்ட காரணங்களால் 41 பேர் உயிரிழந்தனர். அவர்களுக்கு ஆழ்ந்த இரங்கல். தமிழகத்தில் சிறப்பு தீவிர வாக்காளர் திருத்தம் என்ற குழப்பமான நடைமுறையைக் கைவிட்டு, ஏற்கெனவே இருக்கும் பழைய நடைமுறையைத் தேர்தல் ஆணையம் பின்பற்ற வேண்டும்.

தவெக தலைவர் விஜய் பங்கேற்கும் கூட்டங்களுக்கு வேண்டுமென்றே பாதுகாப்பு அளிக்காதது கண்டிக்கத்தக்கது. விஜய்க்கும், அவரைக் காணவரும் பொதுமக்களுக்கும் முழுமையான பாதுகாப்பு வழங்க வேண்டும். தமிழக தொழில் துறை முதலீடுகள், அவற்றால் உருவான வேலைவாய்ப்புகள் குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும்.

விஜய் தலைமையில் 2026 சட்டப் பேரவைத் தேர்தலை சந்திப்பது. தவெக தலைமையிலான தேர்தல் கூட்டணி தொடர்பான அனைத்து முடிவுகளையும் எடுக்கும் முழு அதிகாரத்தை விஜய்க்கு வழங்குவது. கோடிக்கணக்கான மக்களின் ஆதரவைப் பெற்றுள்ள விஜய்தான் முதல்வர் வேட்பாளர் என்பன உள்ளிட்ட 12 தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

# 2026க்கான டிஎன்பிஎஸ்சி தேர்வு அட்டவணை விரைவில் வெளியாகும் என தேர்வாணைய தலைவர் தகவல்



சென்னை, நவ.07-

டிஎன்பிஎஸ்சி 2026ம் ஆண்டுக்கான தேர்வு அட்டவணை விரைவில் வெளியிடப்படும் என்று அதன் தலைவர் எஸ்.கே.பிரபாகர் தெரிவித்தார்.

தமிழக அரசின் பல்வேறு துறைகளுக்கான அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் டிஎன்பிஎஸ்சி வாயிலாக தேர்வு செய்யப் படுகின்றனர். இதன்படி 2026க்கான போட்டித் தேர்வு அட்டவணை விரைவில் வெளியாகவுள்ளது.

இதுதொடர்பாக டிஎன்பிஎஸ்சி தலைவர் எஸ்.கே.பிரபாகர் கூறியதாவது: குரூப்4 தேர்வில் வெவ்வேறு அரசு துறைகளிடமிருந்து காலிப்பணியிடங்கள் வந்த வண்ணம் உள்ளதால் காலிப்பணியிடங்கள் மேலும் அதிகரிக்கும். அதே போல், ஒருங்கிணைந்த குரூப்2 மற்றும் குரூப்2ஏ தேர்விலும் காலிப்பணியிட எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளது.

முந்தைய ஆண்டு தேர்வுகளின்போது இரண்டு அல்லது 3 ஆண்டுகளுக்குரிய காலிப்பணியிடங்கள் சேர்த்து நிரப்பப்பட்டதால் காலியிடங்களின் எண்ணிக்கை அதிகம் இருப்பதுபோல் தோன்றியிருக்கும். தற்போது அந்தந்த ஆண்டுக்குரிய காலியிடங்கள் அதே ஆண்டில் நிரப்பப்படுவதால் காலியிடங்கள் குறைவாக இருப்பது போல் தெரியலாம்.

மாநில அரசு பல்கலைக்கழகங்களில் உள்ள ஆசிரியர் அல்லாத பணியிடங்களையும் டிஎன்பிஎஸ்சி வாயிலாக நிரப்ப அரசு முடிவுசெய்துள்ளது. இதற்கான கல்வித்தகுதிக்கு ஏற்ப அவை குரூப் 4,2 தேர்வு மூலமாகவே நிரப்பப்படும்.

2026ம் ஆண்டுக்கான வருடாந்திர தேர்வு அட்டவணை தயாரிக்கும் பணி முடியும் தருவாயில் உள்ளது. அதில் குரூப்1, குரூப் 2 மற்றும் 2ஏ, குரூப்4 தேர்வுகள் உள்பட பல்வேறு தேர்வுகளுக்கான அறிவிப்புகளுடன் விரைவில் வெளியிடப்படும்.

# அமெரிக்காவின் நியூயார்க் மேயராக இந்திய வம்சாவளி மம்தானி தேர்வு: அதிபர் ட்ரம்ப் கட்சி வேட்பாளர் தோல்வி




நியூயார்க், நவ.07-

அமெரிக்காவின் நியூயார்க் நகர மேயர் தேர்தலில் ஜனநாயக கட்சி வேட்பாளரும், இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவருமான ஜோரான் மம்தானி வெற்றி பெற்றார். அமெரிக்காவின் மிக முக்கியமான நகரங்களில் நியூயார்க் நகரமும் ஒன்று. இங்கு நடைபெற்ற மேயர் தேர்தலில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஜோரான் மம்தானி போட்டியிட்டார்.

இவரது தாய் மீரா நாயர் இந்தியாவைச் சேர்ந்த சினிமா தயாரிப்பாளர். தந்தை மகமூத் மம்தானி உகாண்டாவைச் சேர்ந்தவர். ஜோரான் மம்தானிக்கு 7 வயது இருக்கும்போதே அமெரிக்காவின் நியூயார்க் நகரில் குடியேறிவிட்டார். படிப்பை முடித்ததும் அரசியலில் இறங்கினார். கடந்த 2020ம் ஆண்டு இவர் முதல் முறையாக நியூயார்க் சட்டப்பேரவைக்கு தேர்ந்தெடுக்கப் பட்டார்.

தற்போது நடைபெற்ற நியூயார்க் நகர மேயர் தேர்தலில் அவர் ஜனநாயக கட்சி சார்பில் போட்டியிட்டார். இவரை எதிர்த்து அதிபர் டொனால்டு ட்ரம்பின் குடியரசு கட்சி சார்பில் கர்டிஸ் ஸ்லிவா, சுயேட்சையாக முன்னாள் நியூயார்க் ஆளுநர் ஆண்ட்ரூ கூமோ ஆகியோர் போட்டியிட்டனர்.

மம்தானி தனது பிரச்சாரத்தின் போது இலவச பஸ் சேவை, குழந்தைகள் பராமரிப்பு மையம், நியூயார்க் நகருக்கு சொந்தமான பலசரக்கு கடைகள், குறைந்த விலை மற்றும் வாடகை வீடுகள் உட்பட பல வாக்குறுதிகளை அளித்தார்.

ஜோரான் மம்தானி 50.4 சதவீத வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார். நியூயார்க்கில் மேயராக தேர்வு செய்யப்பட்டுள்ள முதல் இந்திய அமெரிக்க முஸ்லிம் மம்தானி என்பது குறிப்பிடத்தக்கது. இவருக்கு இந்திய அமெரிக்கர்கள் அனைவரும் தங்கள் வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர்.

ஊழலுக்கு முடிவு கட்டுவேன்: நியூயார்க் மேயர் தேர்தலில் வெற்றி பெற்ற ஜோரான் மம்தானி நேற்று முன்தினம் இரவு உரையாற்றினார். இதில் அவர் இந்தியா சுதந்திரம் பெற்றபோது, இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு ஆற்றிய 'விதியுடன் ஒரு சந்திப்பு' என்ற சுதந்திர தின உரையை நினைவு கூர்ந்தார். அப்போது மம்தானி பேசும்போது, "நியூயார்க்கின் புதிய தலைமுறையினருக்கு நன்றி.

நாங்கள் உங்களுக்காக இருக்கிறோம். உங்களுக்காக போராடுவோம். எதிர்காலம் நமது கையில் உள்ளது. ஒரு அரசியல் சாம்ராஜ்ஜியத்தையை நாம் தோற்கடித்துள்ளோம். டொனால்டு ட்ரம்ப் அவர்களே, உங்களை வளர்த்த நகரமே உங்களை தோற்கடித்துவிட்டது. ஊழல் கலாச்சாரத்துக்கு முடிவு கட்டுவேன். இது தான் உங்களைப்போன்ற கோடீஸ்வரர்கள் வரிஏய்ப்பு செய்ய அனுமதித்தது. மலிவான நகரம், புதுவித அரசியல், மாற்றம் ஆகியவற்றுக்கு வாக்களித்த நியூயார்க் மக்களுக்கு நன்றி" என்றார்.

# சபரிமலை பக்தர்களுக்காக 25 லட்சம் பிஸ்கட் பாக்கெட்டுகளை அனுப்பும் தமிழ்நாடு அரசு

சென்னை, நவ.07-

சபரிமலை பக்தர்களுக்காக 25 லட்சம் பிஸ்கட் பாக்கெட்டுகளை தமிழ்நாடு அரசு அனுப்பி வைக்க உள்ளது. தேவஸ்தானம் கேட்டு கொண்டதால் வரும் 14 ம் தேதி தமிழ்நாடு அரசு பிஸ்கட் பாக்கெட்டுகளை அனுப்பி வைக்கும். தமிழக பக்தர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் கேரள அரசின் துணையோடு தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும்.

# ரூ.127.57 கோடி செலவில் 5,322 பள்ளிகளில் 6,672 ஸ்மார்ட் வகுப்பறைகள் அமைக்க டெண்டர் கோரியது தமிழ்நாடு அரசு



சென்னை, நவ.07-

ரூ.127.57 கோடி செலவில் 5,322 பள்ளிகளில் 6,672 ஸ்மார்ட் வகுப்பறைகள் அமைக்க தமிழ்நாடு அரசு டெண்டர் கோரியுள்ளது. தமிழ்நாட்டில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு அமைந்தது முதலே அரசு பள்ளிகளில் பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. அதன்படி ரூ.159 கோடியில் 2,232 அரசு பள்ளிகளில் 2,236 ஆய்வகங்கள் அமைக்கவும் தமிழ்நாடு அரசு டெண்டர் கோரியுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில் 2026-27க்குள் 6,672 ஸ்மார்ட் வகுப்பறைகள் அமைக்கப்படும் என பள்ளிக்கல்வித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். 37,626 அரசு பள்ளிகளில் 30,774 பள்ளிகளில் ஸ்மார்ட் வகுப்பறைகள், ஆய்வகங்கள் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஓமியோபதி, யோகா மற்றும் இயற்கை மருத்துவ பட்ட மேற்படிப்பில் சேர விண்ணப்பிக்கலாம்

சென்னை, நவ.07-

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை ஆணையர் நேற்று வெளியிட்டுள்ள அறிவிப்பு: 2025 2026ம் கல்வியாண்டில் சுயநிதி யோகா மற்றும் இயற்கை மருத்துவ கல்லூரியில் உள்ள அரசுக்கு ஒப்பளிக்கப்பட்ட மற்றும் நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களுக்கான எம்.டி (யோகா மற்றும் இயற்கை மருத்துவம்) பட்டமேற்படிப்பு சேர்க்கைக்கான இணையவழி விண்ணப்பங்கள் தகுதியுள்ளவர்களிடம் இருந்து வரவேற்கப் படுகின்றன. எம்.டி. (ஓமியோபதி) பட்டமேற்படிப்புக்கான தொகுப்பேட்டினை www.tnhealth.tn.gov.in., www.tnayushselection.org. என்ற வலைதளங்களில் பதிவிறக்கும் செய்து கொள்ளலாம். இணையவழியில் மட்டுமே விண்ணப்ப படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பிக்க தேவையான தகுதிகள், விண்ணப்ப கட்டணம் மற்றும் பிற கட்டண விவரங்கள் கலந்தாய்விற்கான அட்டவணை மற்றும் பிற தகவல்களை வலைதளங்களில் பார்த்து அறியலாம்.

அதேபோன்று, 2025 -2026ம் கல்வியாண்டில் சுயநிதி ஓமியோபதி மருத்துவ கல்லூரியில் உள்ள அரசுக்கு ஒப்பளிக்கப்பட்ட இடங்கள், அனைத்திந்திய ஒதுக்கீட்டு இடங்கள் மற்றும் நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களுக்கான எம்.டி. (ஓமியோபதி) பட்டமேற்படிப்பு சேர்க்கைக்கான இணையவழி விண்ணப்பங்கள் தகுதியுள்ளவர்களிடம் இருந்து வரவேற்க ப்படுகின்றன. எம்.டி. (ஓமியோபதி) பட்டமேற்படிப்புக்கான தொகுப்பேட்டினை www.tnhealth.tn.gov.in., www.tnayushselection.org. என்ற வலைதளங்களில் பதிவிறக்கும் செய்து கொள்ளலாம். இணையவழியில் மட்டுமே விண்ணப்ப படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பிக்க தேவையான தகுதிகள், விண்ணப்ப கட்டணம் மற்றும் பிற கட்டண விவரங்கள் கலந்தாய்விற்கான அட்டவணை மற்றும் பிற தகவல்களை வலைதளங்களில் பார்த்து அறியலாம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# வழக்கை ரத்து செய்யக்கோரி ஆதவ் அர்ஜுனா மனு காவல்துறை தரப்பில் கடும் எதிர்ப்பு

## சென்னை உயர் நீதிமன்றத்தில் விசாரணை தள்ளிவைப்பு



சென்னை, நவ.07-

தவெக தேர்தல் பிரசார மேலாண்மை பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா தனது எக்ஸ் தளத்தில், இலங்கை, நேபாளம் போல் அரசின் அடுக்குமுறைக்கு எதிராக ஜென் இசட், ஜென் எக்ஸ் புரட்சி ஏற்படும் என்று பதிவிட்டிருந்தார். இதையடுத்து, கலவரத்தை தூண்டுவது, பொது அமைதிக்கு குந்தகம் விளைவிப்பது உள்ளிட்ட பிரிவுகளில் ஆதவ் அர்ஜுனாவுக்கு எதிராக சைபர் குற்றப் பிரிவு போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். இந்த வழக்கை ரத்து செய்ய கோரி ஆதவ் அர்ஜுனா சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு நீதிபதி ஏ.டி.ஜெகதீஷ் சந்திரா முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, ஆதவ் அர்ஜுனா தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் அபிஷேக் மனு சிங்வி, எக்ஸ் தளத்தில் மேற்கொண்ட பதிவு 34 நிமிடங்களில் நீக்கப்பட்டு விட்டது. பதிவிட்டதில் எந்த உள்நோக்கமும் இல்லை. ஆரம்ப கட்ட விசாரணை நடத்தப்படாமல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று வாதிட்டார். அப்போது குறுக்கிட்ட நீதிபதி, எக்ஸ் தளத்தில் பதிவு செய்து விட்டு பின்னர் அதை நீக்கியதை ஒப்புக்கொள்கிறீர்களா? என்று கேள்வி எழுப்பினார்.

அதற்கு மூத்த வழக்கறிஞர், ஆம். பதிவு நீக்கப்படவில்லை என்றாலும் கூட வழக்குப் பதிவு செய்ய முகாந்திரம் இல்லை. ஆதவ் அர்ஜுனா குற்றப் பின்னணி கொண்டவர் அல்ல. எதிர்கட்சி என்ற அடிப்படையில் கோபமாக சில கருத்துகளை பதிவு செய்துள்ளார் என்றார். இதைத்தொடர்ந்து, காவல் துறை தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ, செப்டம்பர் 27ம் தேதி கூட்ட நெரிசல் நடந்த பின்னர் முக்கிய பொறுப்பில் உள்ள ஆதவ் அர்ஜுனா அங்கிருந்து தப்பியோடி விட்டார். இந்த சம்பவத்தில் ஆதவ் அர்ஜுனாவுக்கும் பங்கு உள்ளது.

சம்பவம் நடந்த பிறகு 28ம் தேதி நள்ளிரவு எக்ஸ் தளத்தில் கலவரத்தை தூண்டும் வகையில் பதிவிட்டுள்ளார். இது சம்பந்தமாக காவல்துறைக்கு வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்த அதிகாரம் உள்ளது. மெசேஜ்களை பார்வேடு செய்தாலே குற்றம் என்ற தீர்ப்புகள் உள்ளன. பதிவை நீக்கி விட்டாலும் கூட 1 லட்சம் பேர் வரை அந்த பதிவை பார்த்துள்ளனர். விசாரணைக்கு ஆஜராக சம்மன் அனுப்பியும் ஆதவ் அர்ஜுனா ஆஜராகவில்லை என்று வாதிட்டார். வாதம் நிறைவடையாததால் விசாரணையை நாளைக்கு தள்ளிவைத்த நீதிபதி, வழக்கில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யக் கூடாது என்று உத்தரவிட்டார்.

# திருத்தணி சுற்றுவட்டார பகுதியில் கரும்பு அறுவடையில் விவசாயிகள் தீவிரம்



திருத்தணி, நவ.07-

திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையில், கரும்பு அரவை கடந்த வாரம் தொடங்கிய நிலையில், விவசாயிகள் கரும்பு அறுவடை பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். திருவள்ளூர் மாவட்டத்தில் திருத்தணி, பள்ளிப்பட்டு, ஆர்.கே.பேட்டை, திருவாலங்காடு ஆகிய பகுதிகளில் விவசாயிகள் அதிக அளவில் கரும்பு பயிர் சாகுபடி செய்து வருகின்றனர். கரும்பு விவசாயிகள் சாகுபடி செய்த கரும்பை திருவாலங்காட்டில் இயங்கி வரும் திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு அனுப்பி பயன்பெற்று வருகின்றனர். கரும்பு விதை நட்டு 12 மாதங்களில் அறுவடைக்கு வரும் கரும்பை, கூலி ஆட்கள் வைத்து வெட்டி வாகனங்களில் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு அனுப்பப்படுகிறது. திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு உட்பட்டு 7 கோட்டங்களில் இருந்து 2.051 விவசாயிகள் 7.505 ஏக்கர் பரப்பளவில் கரும்பு நடவு செய்து ஆலைக்கு அனுப்ப முன்பதிவு செய்துள்ளனர்.

இந்நிலையில். நடப்பு 202526ம் ஆண்டுக்கான கரும்பு அரவை கடந்த வாரம் அமைச்சர் சா.மு.நாசர் தொடங்கி வைத்தார். இதையடுத்து, விவசாயிகளுக்கு கரும்பு ஆலை நிர்வாகம் சார்பில் கரும்பு வெட்டி ஆலைக்கு அனுப்ப முன் அனுமதி கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, வெட்டு அனுமதி பெற்றுள்ள விவசாயிகள் கூலி ஆட்களை வைத்து கரும்பு வெட்டி டிராக்டர்கள் மற்றும் லாரிகளில் திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு அனுப்பி வருகின்றனர்.

திருத்தணி, பள்ளிப்பட்டு பகுதிகளில் கரும்பு அறுவடை பணிகள் தீவிரமடைந்த நிலையில், தமிழகத்தில் விழுப்புரம், கடலூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்தும் ஆந்திராவில் இருந்தும் தொழிலாளர்களை அழைத்து வந்து கரும்பு வெட்டும் பணியில் விவசாயிகள் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

விவசாயிகள் மகிழ்ச்சி

விவசாயிகள் கோரிக்கை ஏற்று இந்த ஆண்டு டன்னுக்கு ரூ.4000 வழங்கப்படும் என்று சட்டமன்றத்தில் வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அறிவிப்பு வெளியிட்டார். கடந்த ஆண்டு 3300 வழங்கப்பட்ட நிலையில், இந்த ஆண்டு விலை உயர்த்தி வழங்கப்பட உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். குறிப்பாக, இந்த ஆண்டு திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் அரவை இலக்கு 2 லட்சம் டன் நிர்ணயிக்கப்பட்டுள்ளதால், ஆலை நிர்வாகம் சார்பில் விவசாயிகளிடமிருந்து பெறப்படும் கரும்பு காலதாமதமின்றி அரவை செய்யப்பட்டு வருவதால், விவசாயிகள் கரும்பு அறுவடை பணியில் தீவிரம் காட்டி வருகின்றனர்.

டன்னுக்கு ரூ.650 கூலி

கரும்பு அறுவடை பணிகள் தீவிரமடைந்துள்ள நிலையில் கூலி ஆட்களுக்கு 1 டன் கரும்புக்கு வெட்டு கூலியாக ரூ.650 விவசாயிகள் வழங்குகின்றனர். ஆலைக்கு வெட்டிய கரும்புகளை வாகனங்களில் ஏற்றிச் செல்ல செலவினம் பொறுத்தவரை ஆலை நிர்வாகம் சார்பில் வழங்கப்படுகிறது.

தனியார் ஆலைகளுக்கு...

திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குட்பட்ட பகுதிகளில் இருந்து கரும்பு தனியார் ஆலைகளுக்கு அனுப்புவதை தடுக்க எல்லைப் பகுதிகளில் சோதனை சாவடிகள் அமைத்து தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருவதாகவும், அனுமதி மீறி தனியார் சர்க்கரை ஆலைக்கு கரும்பு எடுத்துச் சென்றால் சம்பந்தப்பட்டவர்கள் மீது வழக்குப்பதிவு செய்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டது.



# தேனி மாவட்டம் சின்னமனூர் நகராட்சி நிர்வாக சீர்கேட்டை கண்டித்து பாரதிய ஜனதா கட்சி சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம்

தேனி, நவ.07-

தேனி மாவட்டம் சின்னமனூர் ரவுண்டானா பகுதியில் நகராட்சி நிர்வாக சீர்கேட்டை கண்டித்து பாரதியார் ஜனதா கட்சி சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அப்பகுதியில் சாலைகள் குண்டும் குழியுமாக உள்ளது.சாக்கடைகள் சரிவர தூர்வாரப்படவில்லை மற்றும் ஆங்காங்கே குப்பைகள் அல்லப்படுவதில்லை துர்நாற்றம் வீசுவதால் நோய் தொற்றும் ஏற்படக்கூடும் என்றும் மற்றும் மத்திய அரசு கொண்டுவரும் திட்டங்களை கிடப்பில் போடுவதாகவும் கூறி கோஷங்கள் எழுப்பினர். இந்த நிகழ்வில் நகரத் தலைவர் சிங்கம் தலைமை வகித்தார்.மாவட்ட தலைவர் ராஜபாண்டியன்,மாவட்ட பொதுச் செயலாளர் வினோத்குமார், மலைச்சாமி,மாவட்ட பொருளாளர் பொன் ஆனந்தன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர். மாவட்ட விவசாய அணி பொதுச் செயலாளர் லோகேந்திரராஜன்,நகர பொதுச் செயலாளர் சசிகுமார்,நகர பொருளாளர் நாகராஜ்,பிரபு,வக்கீல் மாரிச்செல்வம் மற்றும் கட்சி நிர்வாகிகள்,மகளிர் அணியினர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பெரம்பலூர் அதிமுகவில் S.I.R. குறித்து விழிப்புணர்வு கூட்டம் எப்போது?

S.I R. சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் குறித்த விழிப்புணர்வு கூட்டம் அரசியல் கட்சிகள் சார்பாக நடைபெற்று வருகிறது.

அதிமுகவில் பெரும்பாலான மாவட்டங்களில் நடத்தி முடித்து விட்டனர். அருகிலுள்ள அரியலூர் மாவட்டத்தில் கூட நடந்து முடிந்தது. ஆனால் பெரம்பலூர் மாவட்டத்தில் இன்னும் நடத்தவில்லை என



மாவட்ட செயலாளர்
இரா.தமிழ்செல்வன்

அதிமுக சீனியர் தலைகள் விரக்தி நிலைபாட்டுடன் முணுமுணுக்கின்றனர். பெரம்பலூர் மாவட்டத்திற்குட்பட்ட குன்னம் தொகுதியில் நாளை (08.11.2025) நடை பெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளதே தவிர பெரம்பலூர் மாவட்ட தலைநகரில் நடத்துவது குறித்து எவ்வித தகவலும் இல்லை என்கின்றனர் நகர தீவிர விசுவாசிகள்

# எஸ்ஐஆர் பணிகள் குறித்து இந்திய தேர்தல் துணை ஆணையர் ஆய்வு: 11 மாவட்ட கலெக்டர்கள் பங்கேற்பு

மதுரை, நவ,07-

மதுரை கலெக்டர் அலுவலகத்தில் எஸ்ஐஆர் பணிகள் குறித்து இந்திய தேர்தல் ஆணையர் இன்று ஆய்வு செய்தார். இதில், தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி மற்றும் 11 மாவட்ட கலெக்டர்கள் கலந்து கொண்டனர். தமிழ்நாட்டில் கடந்த 4ம் தேதி முதல் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்.ஐ.ஆர்) மேற்கொள்ளும் பணி நடந்து வருகிறது. இதற்காக வாக்காளர்களின் வீடுகளுக்கு சென்று விண்ணப்பங்கள் வழங்கி வருகின்றனர்.

இந்நிலையில், எஸ்ஐஆர் எனப்படும் இப்பணி தொடர்பான மண்டல ஆய்வுக்கூட்டம், மதுரை கலெக்டர் அலுவலகத்தில் இன்று நடந்தது. கூட்டத்திற்கு இந்திய தேர்தல் ஆணையத்தின் துணை தேர்தல் ஆணையர் பானு பிரகாஷ் யெட்டுரு, இந்திய தேர்தல் ஆணைய இயக்குநர் கே.கே.திவாரி ஆகியோர் தலைமை வகித்தனர். இதில், தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக், மாவட்ட தேர்தல் அலுவலர்களாக மதுரை கலெக்டர் பிரவீன்குமார், சிவகங்கை கலெக்டர் பொற்கொடி, ராமநாதபுரம் கலெக்டர் சிம்ரன்ஜீத்சிங் காலோன், தேனி கலெக்டர் ரஞ்ஜீத் சிங், திண்டுக்கல் கலெக்டர் சரவணன், விருதுநகர் கலெக்டர் சுகபுத்ரா, தூத்துக்குடி கலெக்டர் இளம்பகவத், நெல்லை கலெக்டர் சுகுமார், தென்காசி கலெக்டர் கமல்கிஷோர், கன்னியாகுமரி கலெக்டர் அழகுமீனா, புதுக்கோட்டை கலெக்டர் அருணா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில், எஸ்ஐஆர் திருத்த பணிகளை மேற்கொள்வது, புதிய வாக்காளர் சேர்த்தல் உள்ளிட்டவை குறித்து விவாதிக்கப்பட்டது.

# நல்லாற்றினை ஆய்வு செய்த திருப்பூர் கலெக்டர்

## நல்லாறு பாதுகாப்பு இயக்கம், பொதுமக்கள் மற்றும் CPIM அமைச்சர் மு.பெ.சுவாமிநாதனிடம் மனு கொடுத்ததின் எதிரொலியாக கலெக்டர் ஆய்வு

திருப்பூர், நவ.07-

திருமுருகன் பூண்டியில் உள்ள நல்லாற்றை தூர்வாரவும், ஆக்கிரமிப்புகளை அகற்அகற்ற வேண்டும் என்று நல்லாறு பாதுகாப்பு இயக்கம், பொது மக்கள் மற்றும் சிபிஐஎம் கூட்டாக இணைந்து செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சுவாமிநாதனிடம் மனு கொடுத்ததின் பேரில், திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் நேரடியாக செய்தார். திருமுருகன் பூண்டியில் உள்ள 10 வது வார்டு சுல்லிக்காடு பகுதி, திருமுருகன் பூண்டி, ராக்கியாபாளையம் ராசாத்தி குட்டை ஆகிய இடங்களில் உள்ள கட்டுமானங்களை பார்வையிட்ட பின், இது சம்பந்தமாக அனைத்து கோப்புகளையும் அதிகாரிகளை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு நேரடியாக வரவழைத்து ஆய்வு செய்வதாகவும், மேலும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் நிலைய திட்டங்களில் சில குறைபாடுகளை சரி செய்யுமாறும் அதிகாரிகளுக்கு வாய்மொழி உத்தரவிட்டார்.

அதன் பின் நல்லாறு பாதுகாப்பு இயக்கம், பொதுமக்கள், மற்றும் CPIM ஆகியோர் கூட்டாக இணைந்து தெரிவித்ததாவது: நல்லாற்றில் இது போன்ற பிரச்சனைகள் உள்ளன, மேலும் இந்த பிரச்சனைக்குரிய தீர்வுகளை எதிர்நோக்கி இருக்கிறோம் என்றும் சில கோரிக்கைகளை முன் வைத்தனர்.











1. திருமுருகன் பூண்டி நல்லாற்றின் ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும்.

2. நல்லாறு அன்னூரில் இருந்து அவிநாசி திருமுருகன் பூண்டி ஊத்துக்குளி நஞ்சராயன் குளம் வரை ஆற்றில் புதர் மண்டி கிடப்பதால் இதனை தூர்வார வேண்டும்.

3. திருமுருகன்பூண்டி பாலம் அருகில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய கட்டிடம் பொதுப்பணித்துறை மற்றும் நீர் நீர்வளத்துறை அனுமதி பெற்று தான் கட்டப்படுகிறதா? இதனையும் பொதுமக்களின் பார்வைக்கு தெரியப்படுத்த வேண்டும்.

4. திருமுருகன்பூண்டி பாலம் அருகில் நல்லாற்றின் அகலம் எவ்வளவு?

5. திருமுருகன்பூண்டி நல்லாட்சியின் நடுவே சுல்லிக்காடு தோட்டம் அருகில் 50க்கும் மேற்பட்ட ஏழை குடும்பங்கள் குடிசை போட்டு வாழ்ந்து வந்தனர். 2024 ஆம் ஆண்டு உயர்நீதிமன்ற உத்தரவுப்படி அரசு அதிகாரி களே, அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றினர். பின்பு அதே ஆண்டில் திருமுருகன் பூண்டி நகராட்சி நிர்வாகம் தூய்மை பாரத இயக்கம் வள மீட்பு மையம் என்ற திட்டத்தின் பேரில் 24 லட்சம் மதிப்பீட்டில் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட அதே நல்லாற்றின் நடுவே கட்டியது. இது உயர்வு உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக உள்ளது எனவும்,

6. நல்லாற்றின் நடுவில் கீழபுறம் பாலத்தின் தூண்களில் மூன்று கண்களை அடைத்து, சிறிய அளவிலான கழிவு நீர் தொட்டியின் கட்டப்பட்டுள்ளது. மழைநீர் பெருக்கெடுத்து ஓடும் நேரங்களில் நீர் துவார கண்களை அடைத்து கட்டப்படும் தொட்டி உறுதியாக சேதப்படும்.

7. ராக்கியாபாளையம் ரோட்டில் ராஜாத்தி குளம் அருகில், மழைநீர் வருகின்ற ஓடையில் கழிவுநீர் தொட்டி கட்டப்பட்டுள்ளது. இதே போல் ஓடைகளில் சில இடங்களில் கழிவுநீர் தொட்டி கட்டப்பட்டுள்ளது. இது பொறியாளர்களின் மூலமாக அறிவியல் பூர்வமாக கட்டப்பட்டது சந்தேகத்திற்கு இடமாக உள்ளது என்றும் நல்லாறு பாதுகாப்பு இயக்கம், பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் CPIM ஆகியோர் கூட்டாக இணைந்து கோரிக்கைகளை முன் வைத்தனர்.





# பதிவுத்துறை உதவி தலைவர், மாவட்ட பதிவாளர் பணிகளுக்கு பதவி உயர்வு வழங்க வேண்டும்

சென்னை, நவ.07-

“பதிவுத்துறை உதவித் தலைவர் பணிக்கான பதவி உயர்வுப் பட்டியல் முறையாக தயாரிக்கப்படவில்லை; இந்த விஷயத்தில் உச்சநீதிமன்றத் தீர்ப்பு பின்பற்றப்படவில்லை என்று நான் குற்றஞ் சாட்டியிருந்த நிலையில், அதை மறுத்துள்ள வணிகவரி மற்றும் பதிவுத்துறை, அனைத்து நடைமுறைகளும் உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படியும், விதிகளை பின்பற்றியும் தான் வெளியிடப்பட்டதாக விளக்கம் அளித்திருக்கிறது. இது அப்பட்டமான பொய் ஆகும். ஓர் அரசே அதன் தவறுகளை மறைக்க பொய் கூறுவது கண்டிக்கத்தக்கது.

பதிவுத்துறை உதவித் தலைவர் பதவி உயர்வு தொடர்பான விஷயத்தில் நான் முன் வைத்திருந்த குற்றச்சாட்டே,’’இந்தக் குழப்பங்கள் அனைத்துக்கும் காரணம், உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படியான பணிமூப்புப் பட்டியல் முறையாக வெளியிடப்படாதது தான். அந்தப் பட்டியல் வெளியிடப்பட்டால் தான், தகுதியானவர்களுக்கு பணி மூப்பு வழங்கப்பட்டிருக்கிறதா? என்பதை சரிபார்க்க முடியும்.

அந்த வாய்ப்பை வழங்காமல் நேரடியாக பதவி உயர்வு ஆணை தயாரிக்கப்பட்டால், தகுதியானவர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதா? என்பது யாருக்கும் தெரியாது. பதவி உயர்வில் முறைகேடுகள் நடப்பதற்கு தான் இது வழி வகுக்கும்” என்பது தான். இது தொடர்பாக விளக்கமளித்துள்ள பதிவுத்துறை. ’’உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையிலேயே 2009 10 முதல் 20192020 வரையிலான ஆண்டுகளுக்கான மாவட்டப் பதிவாளர் தேர்ந்தோர் பெயர்பட்டியல் இடஒதுக்கீடு மற்றும் மதிப்பெண் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு ஒருங்கிணைந்த பட்டியலாக 02.02.2024 நாளிட்ட அரசாணையின்படி வெளியிடப்பட்டது’’ என்று கூறியுள்ளது.

பதிவுத்துறையால் சுட்டிக்காட்டப்படும் அரசாணைகள், வணிகவரி மற்றும் பதிவுத்துறை (எச்.2) 22 முதல் 32 வரையிலான எண்களைக் கொண்டவை. இந்த அரசாணைகள் வெளியிடப்பட்டு, சம்ப்ந்தப்பட்ட பணியாளர்களுக்கு சார்பு செய்யப்பட்டிருக்க வேண்டும். இந்த முக்கியக் கடமையை பதிவுத்துறை செய்யவில்லை. அரசாணைகளை பொதுவெளியில் வெளியிட்டதையும், சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்கு சார்பு செய்ததையும் திமுக அரசால் நிரூபிக்க முடியுமா?

G.O.(3D)No.10 Revenue and Disaster Management Department Services wing, Services 3(2) Section Dated.13.01.2023 இன்படி வருவாய்த்துறையில் தகுதிகாண் பருவத்தை நிறைவு செய்யாத உதவியாளர்களுக்கு பணிவிதி விலக்கு அளித்து துணை வட்டாட்சியர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. அதே நடைமுறையை பதிவுத்துறை உதவித் தலைவர் பணிக்கான பதவி உயர்வு வழங்குவதில் பதிவுத்துறை பின்பற்றாதது ஏன்? யாருடைய பதவி உயர்வை தடுப்பதற்காக திமுக அரசு இவ்வாறு செய்தது?

பதவி உயர்வுக்கான தகுதி காண் நாளில், எந்த வித குற்றச்சாட்டுக்கும் ஆளாகாத பல சார்பதிவாளர்களின் பெயர்கள் பதவி உயர்வுக்கான பட்டியலில் விடுபட்டிருக்கிறது. தகுதியின்றி பதவி உயர்வு பெற்ற 7 பேர் மாவட்ட பதிவாளர் பணியியிலிருந்து பதவி இறக்கம் செய்யப்படுவார்கள் என்று தமிழ்நாடு அரசு அறிவித்த பிறகும், அந்த 7 பேரும் இன்று வரை மாவட்டப் பதிவாளர்களாக பணி செய்வது எப்படி என்பதை பதிவுத்துறை விளக்குமா?

பதிவுத்துறை உதவித் தலைவர் பணி நியமனத்தில் அப்பட்டமாக விதிமீறலை நிகழ்த்தியுள்ள திமுக அரசு, அதை மறைப்பதற்காக பொய்களை கட்டவிழ்த்து விடக் கூடாது. எனவே நான் ஏற்கனவே வலியுறுத்தியதைப் போல, பதிவுத்துறை உதவி ஐஜி பணிக்கான பதவி உயர்வுப் பட்டியல் திரும்பப்பெறப்பட வேண்டும்.

ஒருங்கிணைந்த பணிமூப்புப் பட்டியலை பதிவுத்துறை உடனடியாக வெளியிட வேண்டும்; அது குறித்து சம்பந்தப்பட்டவர்களின் கருத்துகளைக் கேட்டறிந்து உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள வழிகாட்டுதல்களின் அடிப்படையில் பதிவுத்துறை உதவித் தலைவர், மாவட்ட பதிவாளர் உள்ளிட்ட அனைத்து பணிகளுக்கும் பதவி உயர்வு வழங்க வேண்டும்“ என்று தெரிவித்துள்ளார்.

# ‘இதைச் செய்யலைன்னா ஓட்டுக் கேட்டு போக முடியாது!’ பரிதாபமாக புலம்பும் தென்காசி காங். எம்எல்ஏ

தென்காசி, நவ.07-

“சொன்னபடி முதல்வர் ஸ்டாலின் செய்துகொடுக்காததால் என் தொகுதி மக்கள் என்னை, ‘நீயெல்லாம் என்னய்யா எம்எல்ஏ... இந்தத் திட்டத்தைக் கூட உன்னால கொண்டுவர முடியலையே’ என்று திட்டுகிறார்கள்’’ தென்காசி தொகுதி காங்கிரஸ் எம்எல்ஏவான பழனி நாடார் தான் இப்படி புலம்பி இருக்கிறார்.

இரட்டைகுளம் ஊத்துமலை கால்வாய் திட்டம் என்பது தென்காசி தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கை. கடந்த சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரத்தின் போது தென்காசி தொகுதி பிரச்சாரத்துக்கு வந்த ஸ்டாலின், “திமுக ஆட்சிக்கு வந்ததும் இரட்டைகுளம் ஊத்துமலை கால்வாய் திட்டத்தை செயல்படுத்துவோம்’’ என வாக்குறுதி அளித்தார்.

ஆனால், கடந்த நாலரை ஆண்டுகளில் அதற்கான எந்த நகர்வும் நடக்கவில்லை. இந்த நிலையில், இது விஷயமாக நேற்று செய்தியாளர்களிடம் பேசிய தென்காசி எம்எல்ஏவான பழனி நாடார், “இரட்டைகுளம் கால்வாய் திட்டத்தை நிறைவேற்றுவோம் என்று ஸ்டாலின் சொன்னதால் தான் கடந்த முறை நான் வெற்றி பெற்றேன்.

ஆனால், அதற்கான வேலைகள் நடக்கவில்லை. கடந்த சில மாதங்களுக்கு முன்பு, தொகுதியின் முக்கியமான 10 பிரச்சினைகளை கோரிக்கை மனுவாக எழுதிக் கொடுக்கும்படி அனைத்துக் கட்சி எம்எல்ஏக்களிடமும் முதல்வர் ஸ்டாலின் கேட்டிருந்தார். அப்போது,



இரட்டைகுளம் கால்வாய் திட்டம், ஆலங்குளம் ஒன்றியத்தை இரண்டாக பிரித்து ஊத்துமலையை தலைமையிடமாக கொண்டு ஊராட்சி ஒன்றியம் அமைப்பது உள்ளிட்ட 10 கோரிக்கைகளை நானும் எழுதிக் கொடுத்திருந்தேன்.

அண்மையில் தென்காசிக்கு வந்திருந்த முதல்வர் எனது கோரிக்கைகளை நிறைவேற்றுவது குறித்து பேசுவார் என எதிர்பார்த்தேன். ஆனால், தென்காசிக்காக முதல்வர் அறிவித்த 10 அறிவிப்புகளில் இரட்டைகுளம் கால்வாய் திட்டம் இல்லாமல் போனதில் நானும் எனது தொகுதி மக்களும் மிகுந்த வருத்தமடைந்தோம்.

என் தொகுதி மக்கள், ‘நீயெல்லாம் என்னய்யா எம்எல்ஏ... இந்த திட்டத்தைக்கூட கொண்டுவர முடியலையே’ என்று என்னைத் திட்டுகிறார்கள். இரட்டைகுளம் கால்வாய் திட்டத்தை அறிவித்தால் மட்டும்தான் இனி தென்காசி தொகுதிக்குள் ஓட்டுக் கேட்டுச் செல்ல முடியும். இல்லாவிட்டால், ஓட்டுக் கேட்டுச் செல்லும்போது விபரீதம் ஏற்படும்.

எனவே, இத்திட்டத்தை முதல்வர் நிறைவேற்றித் தர வேண்டும். இத்திட்டத்துக்கான நிலத்தை அரசு கையகப் படுத்தி, கால்வாய் வெட்டித் தர அனுமதித்தால் நானே எனது சொந்தச் செலவில் கால்வாய் வெட்டிக் கொடுத்துவிடுவேன்.

தேர்தல் வாக்குறுதிகளை திமுக அரசு முழுமையாக நிறைவேற்றி விட்டதா என்று கேட்டால் அதற்கு என்னிடம் விடை இல்லை. நான் சொன்னால் குறை சொல்வதுபோல் ஆகிவிடும். அரசை குறை சொல்வதற்கு எனக்குத் தகுதி இல்லை. அரசு நல்ல முறையில் செயல்படுகிறது.

காங்கிரஸ் தலைமை மூலமும் சட்டப் பேரவையிலும் பல முறை இத்திட்டத்தை வலி யுறுத்தி விட்டேன். இத்திட்டம் அறிவிக்கப்படுவதாகத்தான் இருந்தது. எப்படி மாறியது என்று தெரியவில்லை. காங்கிரஸ் எம்எல்ஏ என்பதால் என்னை ஒதுக்குகிறார்களா என்றும் தெரியவில்லை’’ என்றார்.

# பெரம்பலூர் மாவட்டத்தில் 100 நாள் திட்ட வேலையில் வசூல் வேட்டை


பெரம்பலூர், நவ.07-

பெரம்பலூர் மாவட்டம், பாடாலூர் ஊராட்சியில் நடைபெற்று வரும் 100 நாள் வேலை திட்டத்தில் ஒவ்வொருவரிடமும் கவிதா என்பவர் மூலமாக வாரம் ரூ.200 என வசூல் செய்து வருவதாகவும், தனக்கு வேண்டப்பட்டவர்கள், உறவினர்களுக்கு மட்டுமே வேலை கொடுப்பதாகவும் அப்பாவி மக்கள் புலம்பி வரும் நிலையில், ஆலத்தூர் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலருக்கும் தெரிந்துதான் வசூல் நடக்கிறது. அதனால்தான் புகார் கூறியும் Zonal BDO கண்டுகொள்ளவில்லை என்கின்றனர் சிலர்

# தமிழக அரசியலில் சில வாரங்களில் பெரிய மாற்றம் அன்புமணி நம்பிக்கை

சென்னை, நவ.07-

தமிழக அரசியலில் அடுத்த சில வாரங்களில் பெரிய மாற்றங்கள் ஏற்பட உள்ளதாக பாமக தலைவர் அன்புமணி தருமபுரியில் தெரிவித்தார். தருமபுரி மாவட்டம் காரிமங்கலம் வட்டம் ஈச்சம்பாடி பகுதியில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள ஈச்சம்பாடி அணையில் இருந்து உபரிநீர் நீரேற்றும் திட்டத்தை செயல் படுத்த வலியுறுத்தி பாமக தலைவர் அன்புமணி தலைமையில் நேற்று ஈச்சம்பாடி அணை பகுதியில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.



ஆர்ப்பாட்டத்தின்போது, 'விவசாயிகளுக்கு பயனளிக்கும் எந்த திட்டத்தையும் திமுக அரசு செயல்படுத்தவில்லை. மக்களின் வாழ்வாதாரமாக விளங்கும் நீர்ப்பாசன திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை. தருமபுரி மாவட்டத்தில் ஒகேனக்கல் உபரி நீர் திட்டம் உள்ளிட்ட பாசன திட்டங்கள் அனைத்தும் நிறை வேற்றப்படவில்லை' என அன்புமணி பேசினார்.

ஆர்ப்பாட்ட முடிவில் அவர் செய்தியாளர்களிடம் கூறியது: இன்றுடன் பாமகவின் உரிமை மீட்பு பயணம் 100வது நாளை நிறைவு செய்கிறது. அதையொட்டி, ஈச்சம்பாடி அணைக்கட்டு உபரி நீரை நீரேற்றம் செய்து 60 ஏரிகளுக்கு நிரப்பும் திட்டம் கோரி விவசாயிகளுடன் இணைந்து ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளோம். இந்த திட்டம், கூடுதலாக 8,000 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி வழங்கும்.

தமிழகத்துக்கு ரூ.11 லட்சத்து 32 ஆயிரம் கோடி முதலீடு ஈர்க்கப்பட்டு 34 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது என முதல்வர் கூறும் தகவல்கள் அனைத்தும் பொய். தற்போதுவரை தமிழகத்துக்கு ரூ.1 லட்சம் கோடிக்கு கூட முதலீடுகள் ஈர்க்கப்படவில்லை. இந்த உண்மைகளை தெரியப்படுத்தும் வகையில் பாமக சார்பில் தயாராகி வரும் புத்தகம் விரைவில் வெளியிடப்பட இருக்கிறது. அண்மையில் கோவையில் நடந்த பாலியல் வன்கொடுமை சம்பவத்துக்கு குடிபோதை தான் முக்கிய காரணம்.

இந்தியாவிலேயே போதை பொருள் பயன்பாட்டில் பஞ்சாப் மாநிலம் முதலிடத்திலும், பின்னர் கேரள மாநிலம் முதலிடத்திலும் இருந்தது. தற்போது தமிழ்நாடு போதைப்பொருள் புழக்கத்தில் முதலிடத்தில் உள்ளது. அமெரிக்காவில் கிடைக்கக்கூடிய அனைத்து போதை பொருட்களும் தமிழகத்தில் கிடைக்கிறது.

தேர்தலின்போது பணத்தை கொடுத்து வாக்காளர்களை விலைக்கு வாங்கி வெற்றிபெறலாம் என கணக்குபோடும் திமுகவுக்கு தகுந்த பாடம் புகட்டுவோம். எப்படியும் வெற்றி பெற்றுவிடலாம் என்ற திமுகவின் எண்ணம் நிறைவேறாது. தமிழக அரசியலில் சில வாரங்களில் மிகப்பெரிய மாற்றங்கள் ஏற்படும். 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக தோற்கடிக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# தேர்தல் கூட்டணியை நான் பார்த்துக் கொள்கிறேன்: அதிமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் பழனிசாமி உறுதி

சென்னை, நவ.07-

தேர்தல் கூட்டணியை நான் பார்த்துக் கொள்கிறேன், நீங்கள் கட்சி வளர்ச்சிப் பணிகளை கவனியுங்கள் என்று அதிமுக மாவட்டச் செயலாளர்களுடனான ஆலோசனை கூட்டத்தில் பொதுச்செயலாளர் பழனிசாமி தெரிவித்துள்ளார். இந்திய தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணியை கடந்த நவ.4ம் தேதி தொடங்கியது. இதற்கு திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.



அதே நேரத்தில் அதிமுக மற்றும் பாஜக ஆகிய கட்சிகள் ஆதரித்து வருகின்றன. ஏற்கெனவே வாக்காளர் பட்டியலில் அதிக அளவில் போலி வாக்காளரை திமுக அரசு சேர்த்து இருப்பதாக அதிமுக குற்றஞ்சாட்டி வருகிறது. இந்நிலையில், அதிமுக மாவட்ட செயலாளர்கள் ஆலோசனை கூட்டம், சென்னை ராயப்பேட்டையில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில், பொதுச் செயலாளர் பழனிசாமி தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதில், வாக்குச்சாவடி கிளை அளவில் நியமிக்கப்பட்ட நிர்வாகிகள் அனைவரையும் ஆன்லைனில் ஒருங்கிணைப்பது உள்ளிட்ட பணிகள் நடைபெற்று வருவது குறித்த விவரங்களை கேட்டறிந்தார். பின்னர் கூட்டத்தில் பேசும்போது, எஸ்ஐஆர் பணி மிகவும் முக்கியமான பணி. வாக்காளர் பட்டியலில் உள்ள குளறுபடிகளை சரி செய்வதற்கு இது சரியான தருணம். அதனால் இதில் மாவட்ட செயலாளர்கள் அனைவரும் தனிக்கவனம் செலுத்தி, சரியான வாக்காளர் பட்டியல் தயார் செய்வதற்கு தேவையான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அதிமுக வாக்களிக்கக் கூடியவர்களின் பெயர்களை, வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்க திட்டமிட்டால் அதை தீவிரமாக கண்காணித்து தடுக்க வேண்டும். ஒன்றிய அளவில் வழக்கறிஞர் அணியினரை நியமிக்க வேண்டும். ஒன்றிய அளவில் எஸ்ஐஆர் பணியில் ஆளுங்கட்சியினரின் தலையீடுகள், முறைகேடுகள் ஏதேனும் இருந்தால், உடனடியாக மாவட்ட தேர்தல் அதிகாரிகளிடம் புகார் தெரிவிக்க வேண்டும். எஸ்ஐஆர் பணியை ஆளுங்கட்சியினரே கையிலெடுத்துக்கொள்ளும் செயல்கள் எங்கேனும் நடைபெற்றால் உடனடியாக தடுத்துநிறுத்த வேண்டும்.

இந்த பணியில் அதிமுக சார்பில் நியமிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் நிர்வாகிகளை, எஸ்ஐஆர் பணியில் முழுமையாக ஈடுபடுத்த வேண்டும். இப்பணிக்காக நியமிக்கப்பட்டுள்ள அரசு அலுவலர்களின் பணிகளையும் தீவிரமாக கண்காணிக்க வேண்டும்.

தமிழகத்தில் 2026 சட்டப்பேரவை தேர்தல் கூட்டணியை நான் பார்த்துக்கொள்கிறேன். நீங்கள் கட்சி வளர்ச்சி பணிகளை தீவிரமாக மேற்கொள்ளுங்கள். உள்ளாட்சிகள் அளவிலான மக்கள் பிரச்சினைகள் தொடர்பாக அதிக அளவில் ஆர்ப்பாட்டங்களை நடத்துங்கள்.

திமுக அரசின் அவலங்களை மக்களிடம் கொண்டு போய் சேர்க்க வேண்டும். குறிப்பாக பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என்பதை எடுத்துச்சொல்லுங்கள். இவ்வாறு அவர் பேசினார். இக்கூட்டத்தில் பொருளாளர் திண்டுக்கல் சீனிவாசன், துணைப்பொதுச் செயலாளர்கள் நத்தம் விஸ்வநாதன், கே.பி.முனுசாமி, தலைமை நிலைய செயலாளர் எஸ்.பி.வேலுமணி ஆகியோர் கலந்துகொண்டனர்.



# தனியார் தொழிற்சாலை பெண்கள் விடுதியின் குளியல் அறையில் ரகசிய கேமரா பொருத்திய வடமாநில பெண் கைது

ஓசூர், நவ.07-

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அருகே பெண் தொழிலாளர்கள் விடுதி குளியல் அறையில் ரகசிய கேமரா பொருத்திய வடமாநில பெண் கைது செய்யப்பட்டார். ஓசூர் கெலமங்கலம் அருகே நாகமங்கலத்தில் உள்ள தனியார் தொழிற்சாலையில் பணிபுரியும் பெண்கள் தங்கும் விடுதி லாளிக்கல் பகுதியில் உள்ளது. இங்கு 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் தங்கியுள்ளனர்.

இந்நிலையில், விடுதி குளியல் அறையில் ரகசிய கேமரா பொருத்தப்பட்டுள்ளதாக கூறி நேற்று முன்தினம் இரவு 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் விடுதி முன்பு தர்ணாவில் ஈடுபட்டனர். தகவலறிந்து வந்த உதவி ஆட்சியர் அக்ரிதி சேத்தி மற்றும் எஸ்.பி. தங்கதுரை ஆகியோர் விசாரணை நடத்தினர். பதற்றமான சூழல் நிலவியதால் 100க்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்புக்காக குவிக்கப்பட்டனர்.

விசாரணையில், அங்கு தங்கியுள்ள ஒடிசா மாநிலத்தை சேர்ந்த சக தொழிலாளி நீலுகுமாரி குப்தா (22) என்பவர் ரகசிய கேமராவைப் பொருத்தியது தெரியவந்தது. இதையடுத்து, அவர் கைது செய்யப்பட்டார். பின்னர், தொழிலாளர்கள் தர்ணாவைக் கைவிட்டனர். இதையறிந்த பெண் தொழிலாளர்களின் பெற்றோர் வெளி மாவட்டங்களிலிருந்து நேற்று காலை விடுதிக்கு வரத் தொடங்கினர்.

விடுதியில் தங்கியிருந்த பெண் தொழிலாளர்களிடம் உதவி ஆட்சியர் தலைமையில் விசாரணை நடத்தப்பட்டது. இதற்கிடையில், 200க்கும் மேற்பட்ட பெண்கள் விடுதியை காலி செய்துவிட்டு, தங்கள் ஊர்களுக்குப் புறப்பட்டு சென்றனர். இதுகுறித்து ஏடிஎஸ்பி சங்கர் கூறும்போது, "கேமரா பொருத்தப்பட்ட 30 நிமிடங்களில் அகற்றப்பட்டுவிட்டது.

அதில் வீடியோ எதுவும் பதிவாகவில்லை. வேறு அறைகளில் கேமரா பொருத்தப்பட்டுள்ளதா என்று 100க்கும் மேற்பட்ட பெண் போலீஸார் ஆய்வு செய்து வருகின்றனர்" என்றார். இதனிடையே மாவட்ட காவல் துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "ரகசிய கேமரா பொருத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக தவறான தகவல்களை சமூக வலைதளத்தில் யாரும் பரப்பக் கூடாது" என்று எச்சரித்துள்ளனர்.

ஆண் நண்பர் கைது: இந்நிலையில், கைதான நீலுகுமாரி குப்தாவிடம் நடத்திய விசாரணையில், பெங்களூருவில் பணிபுரியும் அவரது ஆண் நண்பர் சந்தோஷ் என்பவரின் ஆலோசனைப்படி குளியல் அறையில் ரகசிய கேமரா பொருத்தியதாக தெரிவித்தார். இதையடுத்து, பெங்களூரு சென்ற போலீஸார் நேற்று மாலை சந்தோஷை கைது செய்து, அவரது செல்போனை பறிமுதல் செய்தனர். பின்னர் அவரை ஓசூருக்கு அழைத்து வந்து விசாரித்தனர். மேலும், விடுதி வார்டன் சரிதாவிடமும் போலீஸார் விசாரணை மேற்கொண்டனர்.

# பத்தாம் வகுப்பு சமூக அறிவியல் பாட தேர்வுக்கு கூடுதல் இடைவெளி தேவை: ஆசிரியர்கள், மாணவர்கள் கோரிக்கை

சென்னை, நவ.07-

பத்தாம் வகுப்பு பிற பாடங்களுக்கான தேர்வுக்கு இடையே 4 முதல் 9 நாட்கள் இடைவெளி விடப்பட்டுள்ளது. ஆனால் அதிக பாடங்கள் கொண்ட சமூக அறிவியல் பாடத்துக்கு மட்டும் 2 நாட்கள் மட்டுமே இடைவெளி உள்ளது. அந்த நாட்களில் திருப்புதல் செய்ய முடியாத நிலை உள்ளது. அதனால் மாணவர்கள் ஆசிரியர்கள் அதிருப்தியில் உள்ளனர். சுமார் 27 பாடங்கள் கொண்ட சமூக அறிவியல் பாடங்களை 2 நாள் விடுமுறையில் திருப்புதல் செய்ய முடியாது. அதனால் மாணவர்கள் தேர்ச்சி வீதம் குறையும் அபாயம் உள்ளது என்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.



அனைத்து மாணவர்களும் சமூக அறிவியல் பாடத்தில் 100 சதவீதம் தேர்ச்சி பெற உதவும் வகையில் தற்போது வெளியிடப்பட்டுள்ள தேர்வு அட்டவணையில் உரிய திருத்தம் செய்து சமூக அறிவியல் பாடத் தேர்வுக்கு முன்னதாக கூடுதலாக 2 நாட்கள் விடுமுறை அறிவிக்க பள்ளிக் கல்வித்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.



## நீதிமன்ற உத்தரவை செயல்படுத்தாத டாஸ்மாக் மேலாண் இயக்குநர், மேலாளர் ஆஜராக உத்தரவு

மதுரை, நவ.07-

திண்டுக்கல்லைச் சேர்ந்த முத்து, கல்யாணி, சிவசாமி, காளிமுத்து உள்ளிட்ட 30 பேர், தங்களுக்கு சொந்தமான இடத்தை அரசு கையகப்படுத்தியதற்கான இழப்பீட்டு தொகை கேட்டு தொடர்ந்த வழக்கில் ரூ.4,37,42,783 இழப்பீடு வழங்குமாறு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதை எதிர்த்து அரசுத் தரப்பில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இதை விசாரித்த உயர் நீதிமன்றம், இழப்பீட்டு தொகையை 8 வாரத்தில் வழங்க உத்தரவிட்டது. ஆனால், இழப்பீடு வழங்கப்படவில்லை.

மேல்முறையீட்டு மனுவை விசாரித்த நீதிபதிகள் வேல்முருகன், ராமகிருஷ்ணன், "நிலம் கையகப்படுத்தியது தொடர்பான நிலுவை வழக்குகளுக்காக, திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ளஅனைத்து டாஸ்மாக் கடைகளின் தினசரி விற்பனைத் தொகையை வைப்புத் தொகையாக நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும்" என்று உத்தரவிட்டனர்.

இந்த உத்தரவை நிறைவேற்றாததால் முத்து உள்ளிட்ட 30 பேரும் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில், நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடர்ந்தனர். இந்த மனு நீதிபதிகள் வேல்முருகன், ராமகிருஷ்ணன் அமர்வில் விசாரணைக்கு வந்தது. மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் முத்து கணேசபாண்டியன் வாதிட்டார். கூடுதல் அட்வகேட் ஜெனரல் வீராகதிரவன் வாதிடும்போது, "நீதிமன்ற உத்தரவை எதிர்த்து டாஸ்மாக் நிறுவனம் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட உள்ளது" என்றார்.

பின்னர் நீதிபதிகள், "திண்டுக்கல் மாவட்டத்தில் அனைத்து டாஸ்மாக் கடைகளின் அக்.16 முதல் நவ.6 வரையான வருமானம் மற்றும் வங்கி விவரங்களுடன் டாஸ்மாக் மேலாண்மை இயக்குநர் மற்றும் மாவட்ட மேலாளர் ஆகியோர் நாளை (நவ.7) ஆஜராக வேண்டும்" என்று உத்தரவிட்டனர்.

## மாணவி பாலியல் வழக்கு: கூடுதல் விசாரணை அதிகாரி நியமனம்



கோவை, நவ.07-

கோவை பீளமேடு பிருந்தாவன் நகர்பகுதியில், மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மாணவி குணமடைந்ததும் குற்றவாளிகள் அடையாள அணிவகுப்பு நடத்த போலீஸார் திட்டமிட்டுள்ளனர்.


இந்த சம்பவம் தொடர்பாக பீளமேடு காவல் ஆய்வாளர் அர்ஜுன் குமார் தலைமையிலான போலீஸார் வழக்கு பதிவு செய்து, விசாரணை நடத்தி வருகின்றனர். இந்நிலையில், இந்த சம்பவம் தொடர்பான விசாரணையில், கூடுதல் விசாரணை அதிகாரியாக துடியலூர் ஆய்வாளர் லதா நியமிக்கப்பட்டுள்ளார்.

மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில் 3 பேரையும் அவர்களின் காலில் சுட்டு போலீஸார் பிடித்துள்ளனர். காயமடைந்த 3 பேரும் கோவை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களை போலீஸார் கைது செய்ய வந்தபோது என்ன நடந்தது, எத்தகைய சூழலில் துப்பாக்கிச் சூடு நடந்தது என்பது குறித்து கோவை வடக்கு ஆர்டிஓ விசாரணை நடத்தி வருகிறார். இதையொட்டி, மருத்துவமனையில் மூவரிடமும் அவர் நேற்று விசாரணை மேற்கொண்டார்.

# ராணுவத்துக்கு மதம், ஜாதி கிடையாது: ராகுல் கருத்துக்கு அமைச்சர் ராஜ்நாத் சிங் பதில்

புதுடெல்லி, நவ.07-

ராணுவத்துக்கு மதம், ஜாதி ஆகியவை கிடையாது என ராகுல் கருத்துக்கு பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பதில் அளித்துள்ளார்.



பிஹார் மாநிலம் அவுரங்காபாத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தில் மக்களவை காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி பங்கேற்று பேசினார். அப்போது அவர் கூறுகையில், "நாட்டில் உயர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் 10 சதவீதம் பேர் உள்ளனர்.

இவர்கள் கட்டுப்பாட்டில்தான் கார்பரேட் நிறுவனங்கள், அரசு நிர்வாகம், நீதித்துறை, ராணுவமும் கூட இந்த 10 சதவீதத்தினர் கட்டுப்பாட்டில்தான் உள்ளது. மீதம் உள்ள 90 சதவீதம் பேர் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், எஸ்.சி, எஸ்டி பிரிவினர் மற்றும் இதர சிறுபான்மையினர். அதனால்தான் நாங்கள் சமூக நீதி, சம வாய்ப்புக்கு தேசியளவில் ஜாதி ரீதியான மக்கள் தொகை கணக்கெடுப்பு தேவை என கோரிக்கை விடுக்கிறோம்" என்றார்.

ராகுலின் இந்த கருத்துக்கு பதில் அளித்துள்ள பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கூறியதாவது: ராணுவத்திலும் இட ஒதுக்கீடு முறையை கொண்டுவந்து ஒழுங்கற்ற தன்மையை ஏற்படுத்த ராகுல் காந்தி முயற்சிக்கிறார். அவர் ராணுவத்தை அரசியலுக்குள் இழுக்க முயற்சிக்கிறார்.

இட ஒதுக்கீடு இருக்க வேண்டும். பாஜக.,வும் இடஒதுக்கீட்டுக்கு ஆதரவானதுதான். ஏழைகளுக்கு நாங்கள் இட ஒதுக்கீடு வழங்கியுள்ளோம். ஆனால் நமது ராணுவ வீரர்களுக்கு ஒரே ஒரு மதம்தான்.

ராணுவ நடத்தை விதிமுறைதான் அவர்களின் மதம். நாடு நெருக்கடியை சந்திக்கும்போதெல்லாம் நமது வீரர்கள் தங்களின் வீரம் மூலம் நாட்டை தலை நிமிரச் செய்துள்ளனர். ஜாதி, மத ரீதியிலான அரசியல் நாட்டுக்கு தீங்கை ஏற்படுத்தியுள்ளது. அனைத்து தரப்பினரும் முன்னேற வேண்டும் என்பதுதான் நமது எண்ணம். பாகுபாட்டை ஏற்படுத்த நாங்கள் விரும்பவில்லை. இவ்வாறு ராஜ்நாத் சிங் கூறினார்.

# அதிமுக நிர்வாகிகள் என்னுடன் தொடர்பில் உள்ளனர்: செங்கோட்டையன் தகவல்

கோவை, நவ.07-

அதிமுக நிர்வாகிகள் என்னுடன் தொடர்பில் உள்ளனர். அவர்களது பெயர்களை வெளிப்படுத்தினால் பாதிக்கப்படுவார்கள் என்று முன்னாள் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் கூறினார்.



கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் அவர் நேற்று கூறியதாவது: இரட்டை இலை சின்னம் ஒதுக்கீடு தொடர்பாக நிலுவையில் உள்ள மனு மீது விசாரணை நடத்த வேண்டும் என்று தேர்தல் ஆணையத்துக்கு 250 பக்க கடிதம் அனுப்பியுள்ளேன். அதில் பல முக்கிய விஷயங்கள் உள்ளன. தேர்தல் ஆணைய விதிகளின்படி அவற்றை வெளியில் சொல்ல முடியாது. அடுத்தகட்ட நடவடிக்கையை பொறுத்திருந்துப் பாருங்கள். நல்லதே நடக்கும்.

அதிமுக கட்சி விவகாரங்களில் பழனிசாமியின் மகன், மைத்துனர், மருமகன் ஆகியோர் தலையிடுகின்றனர். அவர்கள் தொகுதி வாரியாக சென்று கொண்டிருக்கின்றனர். அவர்களது செயல்பாடுகள் மூத்த நிர்வாகிகளுக்கு இடையூறாக உள்ளன.

அதிமுக நிர்வாகிகள் என்னுடன் தொடர்பில் உள்ளனர். என்னுடன் யார், யார் பேசுகின்றனர் என்பது அவர்களுக்கும், எனக்கும் மட்டும்தான் தெரியும். அதை வெளிப்படுத்தினால், அவர்கள் பாதிக்கப்படுவார்கள்.

நான் கடந்த 53 ஆண்டுகளாக கட்சியில் இருக்கிறேன். என்னை தனிப்பட்ட முறையில் யாரும் இயக்க முடியாது. மூத்த நிர்வாகியான என்னை அதிமுகவில் இருந்து நீக்கியது ஏன் என்று பழனிசாமியிடம்தான் கேட்க வேண்டும். மனோஜ் பாண்டியன் திமுகவில் இணைந்தது அவரது விருப்பம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# கல்லூரி மாணவருக்கு டிசம்பரில் மடிக்கணினி: உதயநிதி ஆலோசனை

சென்னை, நவ.07-

அரசு கல்லூரிமாணவ மாணவிகளுக்கு டிசம்பர் மாதம் மடிக்கணினி விநியோகிக்கப்பட உள்ளது.



இதுதொடர்பாக துணை முதல்வர் உதயநிதி தலைமையில் நேற்று ஆலோசனை நடைபெற்றது. இதில் அமைச்சர்கள் கோவி. செழியன், தங்கம் தென்னரசு, பிடிஆர் பழனிவேல் தியாகராஜன் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

அப்போது, நடப்பு கல்வி ஆண்டில் ரூ.2,000 கோடியில் 10 லட்சம் மடிக்கணினி வழங்குது குறித்தும் எந்த ஆண்டு படிக்கும் மாணவர்களுக்கு முதலில் வழங்கலாம் என்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000